உ

சிவமயம்.

விஷ்ணுவல்லபாயநமா.

# துர்போதசம்வாதம்.

திருமாற்பேறு

பராங்குசமல்லையர்

திருவாய்மலர்ந்தருளியது

இஃது

சிந்தாத்திரிப்பேட்டை

சைவாதாரசபையார்கேட்டுக்கொண்டபடி

பூ—ஸ்ரீ.

சபாபதிமுதலியாரவர்களால்

மெய்ஞ்ஞானவிளக்க

அச்சுக்கூடத்தில்

பதித்தது

துன்மதி௵

புரட்டாசிமீ

இதன்விலை-அணா-௨

## விருத்தம்,

கருதிறபாலையடுத்துளங்கருகிக்.................................... ❋
கட்புலசொலைகளவாதி.................................... ❋
கரும்மேமேநான்பாய்ச்சிலநிந்தைபுரியுங்.................................... ❋
கயவர்வாய்மதமூடணைத்தோர்.................................... ❋
சூரிவுறச்சுட்டுச்சடகோபம்வைத்து.................................... ❋
மூழுப்பட்டைநாமமுஞ்சாத்தி,.................................... ❋
மூடிவினிற்குல்லாபோட்டிடும்பொல்லா.................................... ❋
மூடமான்மதமுந்தாமதமாய்ப்.................................... ❋
பரிதிமுற்பனியுமழலின்முற்பஞ்சும்.................................... ❋
பகரிடியேற்றின்முற்பணியும்.................................... ❋
படும்பெரும்பாடுபட்டுலைந்தோடப்.................................... ❋
பரசிவனடியர்கொண்டாட.................................... ❋
வரமலிதிருமாற்பேற்றினில்வைகும்,.................................... ❋
பராங்குசமல்லையதேவன்,.................................... ❋
வாய்மலர்ந்தருள்துற்போதசம்வாத.................................... ❋
மான்மியநூலெழுத்ததுவே.................................... ❋

---

☞ இப்புத்தகம் வேண்டியவர்கள் வேப்பேரி சூளையைச்சார்ந்த செட்டிக்கிடங்கு திருவேங்கடமுதலி வீதியில் தென்னண்டை வாடையில் (௰அ) வது கதவிலக்கமுள்ள கிருகத்தில் விலைக்கு வாங்கிக்கொள்ளலாம்

உ

கணபதி துணை.

இந்நூலாசிரியர் மாணாக்கராகிய

கூர்மாலயதேவரியற்றிய

# சாத்துக்கவிகள்

## நேரிசையாசிரியப்பா.

எதிர்திரைப்பயோததியிடைப்புகர்வதனக்
கறைமெழுகந்தரக்கனல்விழிபரவத்
துணைவயிற்கண்படுமெரிவினைத்தொடர்பான்
மணமலிவையகமாகியமண்ணகம்
பன்றிவாம்பரியுறுப்படக்கிமீன்மடங்க
வென்றிறையாகிவந்திறந்தொழிதருமற்
றவன்றுரியாதீதமதாகியசிவன்
கவினடிமலருளக்கமலமதிருத்திப்
பரவிவேண்டுவபெறும்பதியெழும்பரிதி
வரதனையாதனவழியுளித்தருளும்
விதிமுடிகிள்ளியவேதியனடியார்
பதமலர்வழிபடும்பத்தியினாலயம்
அருமறையாகமமனைத்தையுந்தெள்ளி
இருநிலம்வியப்புறவினாத்தெழுபயோதரம்
இலக்கணமிலக்கியமெனுங்கடற்கரையைக்
கலக்கமில்லாதுபோய்க்கண்டநன்மதிதனை
ஐம்புலனொடுக்கியவருந்தவத்தவரும்
இம்பரிற்புகழ்த்துநின்றின்புறுமதியம்
வருபராங்குசமல்லனெனவழுத்தும்
ஒருமணியாருயிருய்யத்
தற்போதசம்வாதத்தொடர்பறைந்தனனே.

## விருத்தம்.

அரிபிரமமெனப்பகருமறிவிலிகள்சிரங்கவிழ்ப்ப... ... ... *
வடியாரார்ப்பப் ... ... ... ... ... ... *
பொருவரியதுற்போதசம்வாதமென்னவொருநூல்... ... ... *
புகன்றனெம்மான் ... ... ... ... ... ... *
சரணமலரிணைக்கன்புமிகுதிருமாற்பேறுறையுந்... ... ... *
தலத்தனெங்கும்... ... ... ... ... ... *
பரவியநற்புகழுடையபராங்குசமல்லயனெனும்பேர் ... ... *
படைத்துளானே... ... ... ... ... ... ... (௧)

இருவினைக்குமுரியவனாகிப்பிறந்துபடுமரியை... ... ... *
யிறைவனென்று... ... ... ... ... ... *
சுருதிமுறையிடுமாயினுமரியாகுமெனச்... ... ... ... *
சொற்றிலன்னே... ... ... ... ... ... *
எரிபிருதிவியிற்பிறப்பினரனயன்பாற்பிறக்குமிவை... ... ... *
யிதயத்துள்கா ... ... ... ... ... ... *
றருகும்வயிணவப்பெரியீர்துற்போதசம்வாத... ... ... *
முணர்ந்துய்வீரே... ... ... ... ... ... (௨)

நித்தியவத்திரேதரித்வவத்திரேதாமெனச்சுருதி ... ... ... *
நெடிதுக்கூறும்... ... ... ... ... ... *
அத்தமுணர்ந்துடல்வினையாலலமருவீர்திருமாற்பே ... ... *
றவாவினவகும் ... ... ... ... ... ... *
உத்தமனெப்பொருட்குமிறைபாயவொருபரசிவத்தை... *
யோதிவாழும்... ... ... ... ... ... *
சித்தனெனுமிற்பராங்குசமல்லயதேவன்றனைவணங்கித் ... ... *
தெளிகுவீரே ... ... ... ... ... ... (௩)

துரியாதீதமுங்கடந்தசிவபெருமானடிக்கமலந்... ... ... *
தொழுதுவாழ்த்தி ... ... ... ... ... ... *
இருநிலக்கணரியதவம்பலவியற்றிவேண்டுவன... ... ... ... *
வெல்லாம்பெற்ற ... ... ... ... *
வரமுனிவரிடுசாபவலியினிருநிலவரைப்பில் ... ... *
வந்திறக்கும்... ... ... ... *
ஒருமனிதன்றனைப்பிரமமெனச்சுருதிமுறையிடின்மே ... ... *
லுறுதியுண்டோ... ... ... (௪)



# துர்ப்போதசம்வாதம்.

காப்பு - வெண்பா.

சிவநிந்தையேதவமாஞ்-சிவநிந்தையேகதியாம்
சிவநிந்தையோருட்டியங்கச்-சிவநிந்தைத்
துர்ப்போதசம்வாதத்தொன் னூல்புகலநெஞ்சே
நற்போதகத்தைநித-நாடு (௧)

அங்கிக்குமூன் றுரும்பொன்-றுனவாபோலவே
மங்கிப்பிறந்துழலுமாலடியார்-இங்கியற்றும்
பாடல்டசம்வாதம்பாழாச்சுதே-ஐயோ
கேடில்லாவிந் நூலைக்-கேட்டு (௨)

போதனுதல்வந்தான்-புராரிஅரியோஅவன்றன்
ஆதனத்தில்வந்தானதோட்சசனென்-றேதுமறை
பார்த்தறியீர்பாரீரிப்-பண்ணவரிலேபரம
மூர்த்தியெவர்நீரோ-மொழி (௩)

கட்டளைக்கலித்துறை.

கல்லாஇழவில்லுடையார்மதனையுங்காய்ந்தகண்ணர்
சொல்லாகமமறையில்லாச்சுலோகந்தொடுத்துவரும்
பொல்லாவயிணவப்புல்லர்களுணிப்புலப்பிட நூல்
வல்லார்புகழத்துர்ப்போதசம்வாதம்வழுத்தினனே (௪)

காலப்புரட்டர்மதப்புரட்டோடுகலகஞ்செயுந்
தாலப்புரட்டர்மயில்வாகனேசன்றலஞ்சுருதி
நாலைப்புரட்டிப்பரத்துவமென்பர்தந்நாரணனு
மாலைப்புரட்டும்வயிணவப்புன்மதவாதிகளே (௫)

## ஆசிரியவிருத்தம்.

திருவடியிணையனமிடையிற்சிங்கவுரியாடை...
செறியேனமாலைமார்பிற்...
செங்கையிற்கங்காளமுகமூடிபுதோறுமரி...
சிரமாலைநீள்புயத்தில்...
எரிதருங்கனல்வீசுமூத்தலைக்கூர்முனையி
லிலகும்கேசவனுடலமே
இவ்வாறுதிருமேனிமுழுதும்விட்டுணுவுருவ...
மேற்றருள்சதாசிவத்தின்...
மருமலர்ப்பதமனதிருத்திநனிவந்தித்து...
மறையாகமம்புராணம்...
வாழ்த்துயரசிவமகிமையிற்சிலவெடுத்தவை.....
வகுத்துமுதியோர்தருகெனத்...
சரமதிற்றேவருமெளிதோர்ந்துயத்தற்போத...
சம்வாதமென்னுமொருநூல்-
சாத்திரேனன்சிவநிந்தையோர்கடலைசாய்த்துளந்
தட்டழிந்தகலவென்றே- (சு)

## (வேறு.) விருத்தம்.

நாட்குலைத்துக்கடிக்கவரிற்றுரத்திடாரோ
ஞாயமணிபாயமிதென்றறியாதென்றும்
வாய்வந்தபடிக்குளாத்தாற்கிழியவாய்மேல்-
மாட்டாரோபாடண்டசம்வாதத்தைப்-
பேய்மதியினுலெவ்வேறுபிதற்றிவைத்தான்-
பெரியோரோயாதலின்மாமறைநூலாதி-
ஆய்மருநூற்பொருள்கொடிர்நூல்செய்தலானே-
அதனையுமிங்கிதனையும்பார்த்தறிவீரே- (எ)

உ

கணபதிதுணை.

# துற்போதசம்வாதம்.

கண்ணி-இராகம்-காம்போதி-அடதாளம்.

அருள்பெறுஞ்சைவரா-யிருக்கப்பாஷிண்டியென். *
றபிதானம்வைத்ததெத்தன்மைத்தெனில்-தங் *
குருவுக்குநாமங்குழைத்துப்போடவந்த- *
கொள்கைபோலானது- - ...துற்போதனே (௧)

சிவநிந்தைசெய்கின்றபதிதனாநீச்சர்க்கு- *
ஜெனித்தவரென்றமுத்நூல்சொல்லால்-பெரும்
புவியிலிவ்வேதுவைஅதித்தினியாகிலும்- *
புத்தியாய்ப்பிழைத்திரு- - ...துற்போதனே (௨)

வேதபாகியோ-கனசாஸ்திரியென்றனே- *
விளம்புதற்கேஇதுசாட்சியதாய்-உங்கள் *
காதையெல்லாம்பார்த்தால்கபடநாடகசூத்திரங்- - *
கண்டிங்குநகலிப்பேன் - ...துற்போதனே (௩)

உங்கண்மேற்றப்பில்லைஆதியிற்கௌதமர் *
ஓங்கும்பிர்குரிஷிகண்-ணுவர்முதலோர்-அன்று
செங்கண்மாலுக்கிட்டசாபமுங்களுக்குஞ்- *
சேர்ந்ததுபிரீதன்றோ - - ...துற்போதனே (௪)

விஷ்ணுசுந்தரபாதுகாயநம:

## நூன்முகம்.

மூலகாரணனென்றுபேசுந்திருமாலே- ❋
மூப்போதும்பணியாயோவென்றுரைத்தாய்-ஆதி
மூலகாரணனென்றால்-பிறந்திறந்துழலலாமோனன்
முதலுக்கேமுழுமோசம்- ஆத்மபோதனே (௧)

வேலையிற்றுயின்மாலைத்-துதிசெய்யென்றாயானால்
மேலோர்நரகமென்றார்ஆத்மபோதனே-அதை
நாலுவேதஞ்சொலுமோ-ஞானியர்சொல்வரோ. ❋
நல்லோரைஅடுத்துக்கேள்- ஆத்மபோதனே (௨)

ஆயுநான்மறைசொலுங்-காயத்திரிப்பொருள் ❋
அரியல்லால்வேறுண்டோஎன்றுரைத்தாய்-பிரம
காயத்திரியில்பர்க்கபதமென்னும்பதத்திற்கு- ❋
மாயவனொளியல்லோஎன்றுரைத்தாய் ஆத்மபோதனே (௩)

பர்க்கபதத்திற்கொளிபரமநாபனேயானால்- ❋
பரஞ்சுகனைப்பார்வதிமூடுகையில்-அந்தச்
சொற்சாதிதிருண்டிடும்-அக்காலந்தனிலொளி ❋
தோற்றிவைத்தலாகாதோ- ஆத்மபோதனே (௪)

இன்னமுஞ்சொன்னதுரியனேபா- ❋
மேசுரனாவிட-மூர்த்தத்தொன்றாம்-சொலும்
அன்னதிற்பொன்போல்விளங்கலிற்சிவன்கா ❋
யத்திரிப்பொருளன்றோ- ஆத்மபோதனே (௫)

பிரமன்றலையைக்கொய்யஅரத்தத்தையுறஅரி- ❋
பிட்சையெடுத்திலனோஎன்றுரைத்தாய்-செவ் ❋
வரவிந்தவயனிறவாதிருக்கவடுகத்- ❋
தத்திளெப்படிவரும்- ஆத்மபோதனே (௬)

சிவபெருமானையேபூசித்தவரவர்கள்- ❋
தீவினைகளொழித்துவாழ்ந்திருக்கப்-பின் ❋
பூவர்தம்ஆக்கினைப்படி-கிள்ளியவயிரவத்- ❋
தத்திளெவ்விதம்வரும்- ஆத்மபோதனே (எ)

மேனாள்தக்கனைச்செற்ற-வீரருக்குமுயிர்- *
விண்டயற்கொலும்பிரளய-காலருத்ரப்-பெரு
மானுக்குஞ்சக்தி-தலைஐந்திலொன்றுகொய்- *
வடுகற்கெப்படிவரும் * -துற்போதனே (அ)

கஞ்சன்கபாலங்கை-யத்தியொத்தபிட்சையால்- *
கடவுளைக்கர்வபங்கம்பண்ணி-திரிந் *
துஞ்சாமல்நடித்தலைபோகியாதத்தியென் *
றறைகுதல்பிழைஅன்றோ துற்போதனே (௯)

தசகண்டன்முதலோரைத்தசரதஸ்ரீராமன் - *
தடிந்திட்டபிர்மஹத்திசூழ்ந்தலைக்கச்-சகியா *
துசிதசேதுவிற்சிவபிரதிஷ்டைசெய்துய்ந்ததை *
ஒழிப்போய்கண்டுகொள் துற்போதனே (௰)

பங்கயக்கண்ணனோடண்டம்படைக்கும் ஆதி *
பகவனென்றுதெரியும்பொருட்டு-கயிலை *
அங்கிரியிற்றவஞ்செய்தரிபிள்ளைப்பே- *
றடைந்தானென்றறியாயோ- துற்போதனே (௰௧)

அரனோடயனை அளித்ததனாலரியைக்கே- *
சவனென்றறிந்திலையோஎன்றுரைத்தாய்-சொலும்
அருமகட்பேற்றுக்கும்-அயனை அளித்ததற்கும்- *
அதுவிடையாதுபோ - துற்போதனே (௰௨)

வரனை அரிபடைத்தானென்று நீசொன்னது - *
மலடிமைந்தனுந்தானுவிற்புருஷின்-ஆயல் *
மருப்பினுற்குத்திக்கொண்-டொருவர்க்கொருவர்மாய்ந்த
வண்மைக்கொப்பாகுமே - துற்போதனே (௰௩)

தக்கன்மகத்திறந்தோர்சவத்தைக்கேசத்திற்போட்டுத்-
தண்டித்ததானுங்கள்மாயவற்கு-வெட்க- *
மிக்கக்கேசவனென்றுபேர்வந்ததேஅன்றி - *
வேறுண்டோவிடுவிடு - துற்போதனே -(௰௪)

எங்கள்அரிக்குச்சக்ரம் - ஆகியாஇருக்க - *
ஈசனளித்ததேதென்றுரைத்தாய்-விண் *

கங்கைவேணியன்மாலே - அளித்துச்சக்கரத்தையும்
காக்குந்தொழிலுந்தந்தார் - துற்போதனே (௰௫)

அதனால்வரும்வெற்றியைத் - தனதாகப்பாவித்தே
அரனைமறந்ததனால்அதுமறைய - அத்- *
தியில்சிவனடிக்கீழ் தனதுகண்மலர்சாத்திச்- *
சக்கரம்அரிபெற்றான் - துற்போதனே - (௰௬)

ஆதியிலஅரன்மாலுக் - காழியுங்கதையையும் * -
அருளாற்சங்குபத்மமும் - அளித்துப்பின்னும்-மறு
நீதியுந்தொழிலுந்தந் - திருப்பதைஅறியாமல் *
நேமிநாதனென்றாய் - துற்போதனே (௰௭)

சம்பளித்தது நிசமாகிலாழிக்குவானன் -*
சண்டைக்கஞ்சுவானேனென்றுரைத்தாய் - வரம்
பம்பரிக்கும்வாணற்கும்நல்கியதிருவாக்கைப் *
பாலிக்கும்பொருட்டன்றோ - துற்போதனே - (௰௮)

சிவபத்தராகுந்ததீசிமேல்வீசிக்கச் - *
சிதறிப்பொடியாய்ப்போனசக்கரமோ - அது
சிவனைத்தூரத்திலேதேன் - றாகிலுங்கேட்டாற் *
சூத்திச்சிரிக்காரோ - - - துற்போதனே (௰௯)

அதுவும்அன்றிமேனாள்சிவகணத்தின்மீதும் *
ஆனைமுகன்மீதும்அலைதவிடுக்கத் - கணத் *
திலோர்பூதம்விழுங்கக்கோணங்கிக்கூத்தாடி *
அரிபெற்றதறியாயோ - துற்போதனே (௨௰)

சக்கரம்பூசித்துச்சூலம்பெற்றான்அரன் *
சங்கதிதெரியாயோஎன்றுரைத்தாய் - ஆனால்
அக்கதைமாச்சரியங்கற்பனை அல்லது - *
அதைவேதஞ்சொல்லுதோ துற்போதனே (௨௧)

சூலங்கொடுத்தல்மெய்யாயிருந்தால்மது. -*
சூதனைவாயிற்காவலனைத்-தன்-- *
சூலத்தினாற்குத்தித்தாக்கமங்கல்யப்பிட்சை- *
சொல்லுந்திருக்கேட்பானேன்- -துற்போனே (௨௨)

அறுபதினாயிரஞ்சகரரைளரித்தவன்....... *
ஆணிற்பெரியனன்றோவென்றுரைத்தாய்-அயன்
மறுமார்பனைத்துறவோரைமயக்குங்கா.......-*
மனையெரித்ததெளிதோ-............தற்போதமே (உங)

கறையிடற்றோன்பெரியோனென்றுசொல்லிய*
காரணத்தால்நன்றாயறிந்துகொள்வாய்-வரிச்
சிறைகொண்டோர்க்குருவி-ஓடிப்பறந்தாலும்-...*
சேண்பருந்தாகுமோ.... ........தற்போதமே (உச)

மகருமதனைளரித்ததுசிறப்பல அரன்-........-*
மகறுபவன்மால்மைந்த-னென்றுரைத்தாய்-ரதி
மிகஅழுமதனை உயிர்ப்பித்தளிக்காத-.......*
விண்டுவுந்தேவனோ-...........தற்போதமே (உரு)

ஆலத்தைமுராஹரிநக்கனும்பாத்திரத்-.......-*
தருந்தினாலல்லவோஎன்றுரைத்தாய் -இந்த-
மூலத்தையோசிக்கில்- நுழைந்தான்கீழ்நுழைந்தான்போல்-
மொழிபவந்ததல்லவோ-.........தற்போதமே (உசா)

உருவிஷிஞ்சகியாமல்-கறுத்தஅரியேவிஷம்... *
உண்டானென்றால்அங்கீகரிப்பவர்யார்-அயன்
சுராழஇவனழச்-சிவன்வந்தயின்றதைத்........*
தொல்லுலகறியாதோ.......... தற்போதமே(உஎ)

உதைஉண்டஎமனையும். அரனையுமுராஹரி... ...*
ஊழியிற்கொல்லுவானென்றுரைத்தாய்-உயிர்
பதைபதைக்கமுரா-ஹரிமுன்னவதரித்து... ...*
பட்டபாடுகேளாய்-..............தற்போதமே (உஅ)

குற்றத்தால்மூன்பெற்ற-பத்துப்பிறவியிலும்...*
கூற்றன்வந்துவந்துதன்னுயிரை-மிகப்...*
பற்றிக்கொண்டுபோகும்-அரியேகொல்வானென்றால்
பழியிலாரிகழார்............... ... தற்போதமே (உகூ)

புரத்தேவரையும்அரி-கொல்வதேநிசமானால்...*

பூமிபாரமெல்லாம்நீங்கும்படி-அழு... ... *
திரங்கும்பூமிதேவிக்கியடினைஉண்டாக்கி... .... *
என்கொடுக்கஇல்லை ..... ..... ..... ஆத்மபோதனே (௫௰)

புத்தர்களை பசுவாய்-அரிகாவாவிடில் .... .. *
புரமெரிப்பானே-அரமென்றுரைத்தாய்-மூனம்
அத்தன்புரமெழுநஞ்சிரித்தெரித்ததே அன்றி- -*
அவையிருந்தென்பலன் ..... ....... ஆத்மபோதனே (௫௧)

அச்சுதனெனவேதம்-அரியைச்சொல்லிஇருக்க*
அவனைக்கொல்பயருண்டோஎன்றுரைத்தாய்-அவன்
அச்சொடியுந்சுரனா அமரரொன்பதும்போலாம்-
அதனாலென்னசிலாக்யம்-........... ஆத்மபோதனே (௫௨)

நெடுமாலிறைவனாலே-தக்கன்வேள்வியைக்காத்து--
நிலைநிறுந்தலாகாதோ-ஆத்மபோதனே-மணி
முடிசடித்தலனேமூன்-முடிஇழந்திடுமாலோ-*
முழுமுதலெனுஞ்சொல்..... ..... ஆத்மபோதனே (௫௩)

அரிபதமலர்களைச்சிரத்தினிற்றரித்தவன்- .. .. *
அரனல்லால்வேறுண்டோஎன்றுரைத்தாய்-வில்
லருச்சுனற்கும்வளிஅளித்நற்குமுடிமலர்.... *
அதற்கிதுவிடையாமோ........... ...ஆத்மபோதனே (௫௪)

கண்ணனை அருச்சுனன்எண்ணிப்பூசித்தமலர் ...*
கண்ணுதற்சிவபிரான்தரித்திருக்க-மூகில்-*
வண்ணன்பதமலரொன்-றெண்ணிஎப்படிசொல்வாய்-*
மாபாரதத்திலுண்டோ.......... ........ஆத்மபோதனே (௫௫)

அரிஅயன்அமரர்க்குச்செய்பூசைநமஸ்காரம்---*
அவர்க்குள்அந்தரியாமி-யாயிருந்தே-நின்-
றெருமையாய்க்கொள்பவன்-சிவனென்றுரைஞ்சொல்வ
துணர்த்திடும்பொருட்டன்றோ ....ஆத்மபோதனே (௫௬)

சாபத்தைஇருபிளவாகவேஇரிதரத் ... ..... ...*
தரித்தவன்அரியன்றோ என்றுரைத்தாய்-அந்த

இரணியனுதிரத்தைப்-பானம்பண்ணும்வெறியால்
ஏங்கும்நரசிங்கத்தை.................. துற்போதனே (௧௭)

வீரன்சிம்புளாய்வந்து-கிழித்தெறிந்துரிபோர்த்த
விபரம்வேதத்திற்காண்பாய்துற்போதனே-முன்
போரிலிராமனை-ராவணன்வெல்வது................ *
போதும்நுதல்லவோ.................. துற்போதனே (௧௮)

கொல்லாண்மைச்சரபத்தைச்-சிங்கமெங்காணும்
சொல்லுமோ இரண்டையுஞ்-சீர்தூக்கிப்பார்-ஆனால்
சொல்பவர்சொன்னாலும்-கேட்போர்மதிஎங்கே
தூங்கிடப்போயிற்றோ.................. துற்போதனே (௧௯)

அங்கணன்கால்வழி-இந்திரியத்தாற்சாத்தன் *
அவதரித்தானன்றோஎன்றுரைத்தாய் -அரன்
செங்கண்மாலைப்புணர்ந்-தயனைச்சாளக்கிராமத்தைச்
சேரஅளித்ததுபோல்.................. துற்போதனே (௨௰)

சாத்தனையும்பெற்றிருக்கக்கால்வழியென்று *
தப்புநீஎன்சொன்னாய்துற்போதனே-உயிர்
காத்தருள்ஆம்சிவன்பெண்ணரியெனுமீதால் *
கண்டுகொண்டுய்குவாய்.................. துற்போதனே (௨௧)

எங்கள்செங்கண்மாலைச்சிவனயன்முதலோரும் *
எத்திப்பணிந்திலையோஎன்றுரைத்தாய்-மலர்ப்
பங்கயன்மால்இந்திரன்முதலோரும்எம்பிரான்
பழவடியாரன்றோ.................. துற்போதனே (௨௨)

அரன்அன்றிஎனைய - தேவரைப்பூசிப்போர் *
ஆகாமலத்தைப்புசிப்பரென்றே- நாலுஞ்
சுருதிமுதலெல்லவையும்-முறையிட்டிருக்கின்ற *
சூத்திரந்தெரியாயோ.................. துற்போதனே (௨௩)

வாலிராவணற்கும்பவுண்டற்குநல்கிய - *
வரமெல்லாம்பாழாச்சுமதென்றுரைத்தாய்-அங்கு

பாலியால்அரிக்கருள்-பதவியுஞ்செல்வமும் *
பாழாக்குதோசொல்வாய்.............. தற்போதனே (௪௪)

பிற்காலத்தவரெல்லாம்-அரன்சொலுந்திருவாக்கை -
பிசகியேஅழிந்தார்களென்றறிவாய்- உண்மை
இப்பயன்அறியாமல்தலைகீழாய்விழுந்திட்டால் *
இருநிலந்தாங்குமோ.................. தற்போதனே- (௪௫)

அரிபிறப்பில்அரனைப்பூசித்தானென்றல்மோ *
கனசாஸ்திரம்அன்றோஎன்றுரைத்தாய்-மூப்
புரிமெரித்தோன்பதம்போற்றித்திருவைகுந்தம் *
போமென்னுமறைமோ.................. கனநூலோ (௪௬)

அரனிடம்பெற்றவரத்தால்ஆதிவிஷ்ணுவும் .... *
அவதாரத்திசைபெற்றுனெனப்பாரதம்-நன்
குரைத்திடல்மோகனசாஸ்திரமோசொல்வாய் *
ஊழ்வினைக்குட்படுந்.................... தற்போதனே (௪௭)

புத்தாவதாரத்தில்மோகனநூல்செய்து ... ...*
டத்திரைக்கெடுத்தாட்போல்உங்களையும் -மூக்கண்
மூத்தனைப்பூசித்தழுத்திபெறுவகை - ..... *
மோகனநூல்செய்தான்................ தற்போதனே (௪௮)

அரிமண்தாங்கஎனம் - ஆஅனன்றிஅரன் ......*
அடிதேடும்பொருட்டல்ல-என்றுரைத்தாய்-ஆதி
உரகனும்ஆமையும்-தாங்கிஇருக்கமீள ...... *
உலகந்தாங்குவதேனோ .......... தற்போதனே (௪௯)

காசினியில்விஸ்வரூபன்விஸ்வாதீதன் .......*
கழலிணைகாண்பானோதற்போதனே-ஜெக
தீசனேட்டினையும்-அரிப்பதனல்அரி..........*
எனும்இயற்பெயரறி .......... .என்றுரைத்தாய் (௫௰)

படைப்பதற்கயனென்றும் - காப்பதற்கரியென்னும்
படைத்துக்காத்தவையெல்லாம்சம்ஹரிக்க-சிவன்-
கடவுளென்றும்வேதஞ்சொல்லவுமறந்தாயோ *
கட்சிபேதங்கொண்ட.................. தற்போதனே (௫௧).

நீசொன்னபடியேசரியென்றாலுன்மதம் .... *
நெடுமால்சமயமல்லவென்றால்-புவி... *
வாசஉயிரெல்லாம்-காப்பவன்அரியென்னும் *
வாய்மைக்குமாறாகும்.......... தற்போதனே (௩௨)

உனதுபூர்வாசாரியரெல்லாம்அரனே ......... *
யுகாந்தத்தெலவையுஞ்சம்-ஹரிப்பனென்று-நல்ல
தனதாய்ச்சொல்லியிருக்கநீயேசொல்விபரீதம்.. *
சாற்றில்வஞ்சனை அன்றோ......... தற்போதனே (௩௩)

சங்காரம்என்பதொன்றொருவர்க்குமெளிதல்ல
தற்பரநிற்குணத்தகைமையதாம் .. உண்மை
அங்கதைநீமற்றைத்தொழில்போலும்இத்தொழில்
ஆமென்றுன்புந்தியில் ......... நினைத்தாயோ (௩௪)

அத்தொழில்நுட்பம்-பரமரகசியமாம் ... .. *
அரிக்கதுசெய்பச்சத்துவம்இல்லை - அது *
வித்தகக்குருமூர்த்தத்தாலறிதல்வேண்டும் ... *
விளையாட்டாயெண்ணாதே ......... தற்போதனே (௩௫)

அழிக்குந்தொழிலொன்றே அரிக்குக்கிடைத்தால்நீங்கள்
அனைவரும்அப்போதேமுத்தரென்றும்-சைவ
வழிக்குரித்தாகியேபேரறிவினராவீர்... .. ...*
மனப்பால்குடிக்கவேண்டாம் ...... தற்போதனே (௩௬)

நாட்டிற்பிறந்துழன்றுவேகாப்பிணமாய்ச்செக *
நாதத்திற்கிடப்பதைப்பார்த்திருந்தும்-பா
லாட்சன்முதலோனைஅழிப்பனென்றுகூறில்... *
ஆர்தான்அங்கீகரிப்பார் ............ தற்போதனே (௩௭)

பின்னைகேள்வன்பிரமன்இந்திரன்முதலான ... *
பெருந்தேவரைஊழியிற்சுட்டெரித்த-இத் ...
தன்மையால்அரனெனத்திருப்பெயர்வந்ததைச் *
சான்றோராட்சியிற்காண்பாய் ... ... தற்போதனே (௩௮)

வியாதன்போல்அயன்சுகர்-முதலோர்க்கும்வாய்மூட்ட
விரைத்திற்கென்சொல்லுவாயென்றுரைத்தாய் - அவ்
வியாதன்போல்சிவசந்நிதானதின்றுகூறு ... *
விதத்திலுறவில்லை ............ சற்போதனே (௫௯)

வேதமேபொய்சொல்லா-வாயனென்றவனை ... *
விளம்புதற்கென்சொல்வாயென்றுரைத்தாய்-மறை
ஆதிகலையேற்படுத்தினதல்லாலுரைப்பதெல்- - *
லாம்பிரமாணமாமோ ........ சற்போதனே (௬௰)

ஏனெனில்வேதத்திலுள்ளபடியேசிவன் ... .. *
இயற்புராணம்பத்தென்-றெடுத்துரைத்தான்-அரன்
தானேபரனல்லனென்றால்பதினெட்டையும் *
சாதிப்பன்அரிபட்சம் ..........சற்போதனே (௬௧)

மாடாகிமால்சிவன்-றனைத்தாங்காவிடில் ...*
மாதேவன்இருப்பானேனென்றுரைத்தாய்-சுரர்
நீடாணவங்கெடத்தேனாமுறித்தவற்கு ......*
நேரிடுமோவிங்கு ... ........... சற்போதனே (௬௨)

அன்றியும்நின்னுரை-கோபுரந்தாங்கிநி ... *
யாயம்போலும்அரி-மாடாகி-எதிர் ...*
நின்றுதாங்கியதுதன்னபசாரத்தை .... ......*
நீக்கும்பொருட்டன்றோ ........ சற்போதனே (௬௩)

எருதாகிமால்வந்திரத்தங்கான்றீசனை ... ... *
எத்தித்தொழுதானென்னல்கேட்டிலையோ-இந்த
பரிசறிந்தானருள்வரம்பெற்றவலிமையால் *
பரித்தானென்றறியாயோ ......... சற்போதனே (௬௪)

பரமனிறைவனென்றால்அநுமானாய்த்திருமாலைப்-
பரித்துசுமப்பானேனென்றுரைத்தாய் - அன்று
அரியைக்காக்கஅரன்அநுமானாத்தந்ததால் *
அரனென்றெப்படிகண்டாய்..... சற்போதனே (௬௫)

தேவியார்க்கொடியாயும்-வரகுதியாயும் *
சிவனைஅடுத்திறைஞ்சுந்தன்னனைநீ-சார் *

பாவிக்கும்பகவனென்றென்றுன்யோசியாமல் *
பகருதல்பழிப்பன்றோ ...... தற்போதனே (௯௬)

பெரியோர்காவியங்களில் -- ஓரிடத்திற்சொல்லும்
பெற்றியைப்படித்ததே-போதுமென-மற்
றொருநூடியிற்சொல்லுமுண்மையைஅறியாமல். -*
றோடமருந்திண்பாய் ............ தற்போதனே (௯௭)

திசைமுகன்முதலோரை அழிப்பவன் அரியென்றால்-
சிசமாலை துசொல்லென்றுரைத்தாய் -அதி
திசமா அழிக்குந்தொழில்வேதம்அரிக்குண்டென்றால்
தின்சொல்லுலகுக்கேற்குந் .......... தற்போதனே (௯௮)

அந்தகன் இந்திரன்-மதன்முதற்சுரரைச்சங் *
கரிக்குநாளில் அரி-அயன்சிரத்தை-அரித்
தந்தந்தயுகந்தொறும்-அவை அறிகுறியாக *
அணிந்தருள்செய்கின்றான் தற்போதனே (௯௯)

கண்டாகனற்கரன்-கதிபீவான் அரியென்று *
கழறுதற்கென்சொல்வாய்-என்றுரைத்தாய்-நீல
கண்டற்குத்தொண்டனும்-அரியைத்தூஷணஞ்செய்ய
கந்தைஅடங்கச்சொன்னர் தற்போதனே (௱)

சிவசின்னங்களைப்பெற்றஎவ்வமகன்றுறிவ்ப. *
தேகமன்னியகண்-டாகனனுக்-கெய்தத் - *
தவமிகுங்கைவல்யம்அளித்ததோபெரிது -- *
சாட்சியோசொலவற்றாய் தற்போதனே (௱௧)

ஆகாயத்தைப்பாயாய்ச்சுருட்டவல்லவரோ - *
அவர்கள்சிவன்அன்றிஅகண்டிதமாம் சிவ-*
போகானுபூதியைப்பெறுவார்கள்நீஇந்தப்-*
புதுமையோசித்துப்பார்- தற்போதனே (௱௨)

ஆதலினற்பரசிவமன்றிஒருக்காலும் ............ *
ஆர்க்கும்முத்தியில்லைதற்போதனே-வெறும்

வாதினுலென்பயன்வானகமறியாத ........ *
மனழையும்பெய்வதுண்டோ ........ துற்போதனே (௭௩)

பெருமிதஸ்ரீராமன்சேவடியாற்கல்லும் ... *
பெண்ணுக்கில்லையோஎன்றுரைத்தாய்-அது
இருடிசொற்படிஅன்றேகால்பட்டஇடமெல்லாம்
ஏன்பெண்ணாகவில்லை - துற்போதனே (௭௪)

எதிபதிபரசமயம்வென்றரிசமய ... ... *
மேதாபிக்ஷவில்லையோஎன்றுரைத்தாய்-ஜெக-
பதியெனுந்திருநீற்றுச்சொழற்குத்தோற்றவன் *
பரசமயம்வென்றானே ........... துற்போதனே (௭௫)

இதுகண்டகூரேசன்குதர்க்கஞ்செயச்சோழனால் *
இருகண்ணிழந்திலையோமிகநாண- முற்றும்
அதுதெரியாமல்நீ-சமயத்தைவென்றெனன்
நகங்கரிப்பதெப்படி - துற்போதனே (௭௬)

தப்தமந்திரம்புண்டரத்தால்மானிடர்க்குத் *
தரவில்லையோமுத்திஎன்றுரைத்தாய் -உங்கட்
கித்தால்முத்தியோஜெய-விஜயராக்கர்யோனி .-*
யிற்ஜெனிப்பானேனென்சொல் - துற்போதனே (௭௭)

திருமண்ணைத்தப்தமுத்திரையைத்தரிப்பவரைத் *
தரிக்கச்செய்பவர்களைக்கண்ணிற்கண்டால்-தன்
பெருங்கிராமத்தைவிட்-டோட்டமறு நான்முதல் *
பேசுதற்கென்வழி - துற்போதனே (௭௮)

வடமன்கெட்டுக்கொடியவயினைவருனை தி- --. *
மாநிலந்தான்சொல்க்கேட்டிலையோ-மனத்--
திடங்கொண்டுன்மதத்தைவிட்-டருளாதிசைவர்தாள்
சிந்தித்திடேளுயோ - துற்போதனே (௭௯)

ஆனைஅழைத்தபோ - தரியைவிடுத்தளித்த - *
அரனேபரனென்றேநீயுணர்வாய்-இந்த *
ஞானவாசகத்தால் - மோனரகசியத்தின் - *
நலந்தெரிந்தென்னையாண்- டருள்சைவனே (௮௰)

இதுபரியந்தம்நீசொன்னதெல்லாமுண்மை- *
என்றறியாமல்நான்வீண்குதர்க்கஞ்-செய்த் :
மதபேதந்தனைப்பொறுத்-திடுமவர்கதைசில--- -*
வருத்துரைத்திடுவன்கேட் ..... ...டருள்சைவனே (௮௧)

அரிதேவகிக்குமுன்னம்-அவதரித்தானென்றால்--
அன்புடன்கேட்பார்கள்வைணவர்கள் - அரி
அரற்குப்பிறந்தானென்றால்-நாக்கைப்பிடுங்கிக்கொண்-
டவதிப்படுவதேனோ... ..... ... ...... அருள்சைவனே (௮௨)

குந்திமையமால்முனங்கும்பிட்டானென்றிடில்...*
கூசாமற்கேட்பார்கள்வைணவர்கள்- சிவனை
வந்தித்தானென்றிடில்செவிகொடாதிருந்து-*
வயிறெரிந்துழல்வதென்-- ... - அருள்சைவனே (௮௩)

இருடியர்பாதம்பூசித்தானென்றால்அதை- . *
இஷ்டமுடன்கேட்பார்வைணவர்கள்-ஆதி*
பரமசிவனைப்பணிந்தானென்றால்கேளாத......*
பாவமென்கொண்டார்க... .... .... எருள்சைவனே (௮௪)

மால்வேடனாலிறந்தானென்றால்அதைமிக-...-...-*
மகிமையுடன்கேட்பார்வைணவர்கள் - சீர்
சால்புறுஞ்சரபத்தால்இறந்தானென்றாலுளந்- ...-...*
தடுமாட்டங்கொள்வார்க.. ... எருள்சைவனே - (௮௫)

மாதவன்விஜயற்குவண் டிஓட்டினனென்றால் .. *
வந்துவந்துகேட்பார்வைணவர்கள்-பரஞ் *
சோதிபதத்தில்விழி-கொண்டர்ச்சித்தானென்றால்
துள்ளிமனத்துடிப்பா ... .. .. ரருள்சைவனே (௮௬)

வையமீரேழ்வயிற்-றிருக்கப்பண்கவர்களால்- - *
வாதைப்படுவதேனோ-அருள்சைவனே-அரி
தெய்வந்தானாயிருந்-தாற்கன்மமொழிந்திடச் - *
சிவபூசைசெய்வானேன்- - - - - - எருள்சைவனே (௮௭)

பிறப்புண்டென்பதற்குஸ்ரீஜபிந்திசாட்சி - -- *
பெருஞ்சமுசாரத்துக்கமுண்டென்பதற்-குள்ளே
வெறுப்பிற்சிதைசாட்சி-மரணமுண்டென்பதற்கு
வேடன்சாட்சியுண்டுகேள் - - - அருள்சைவனே (அஅ)

பதியிற்பலஜன்மமுண்டென்பதற்குச்சாட்சி .... ....
பத்தவதாரமென்றறியாயோ-பசு- - - -
பதிக்கடிமையென்றதற்கிராமேசுரமுதற் - *
பதிகளெல்லாஞ்சாட்சி ... ......அருள்சைவனே - (அகூ)

நாடியிதுவரையில்-பிறந்தநாட்பிறவா ...... *
நாளாய்க்கழித்துவிட்டேனருள்சைவனே -இனி
கூடும்படிசன்மார்க்கங்காட்டிடவப்பேனிக்குக்
குறைவில்லைகுறைவில்லை ........குணசீலனே (கூ0)

இத்தன்மையாமாலேக்-கர்த்தனென்றுநம்பி -*
எப்படிபிழைப்பாய்நீகுணசீலனே-அப்பால்-
நித்யம்இதுவென்றும்அனித்யமிதுவென்றும் *
நீயேயோசித்துப்பார் ........... குணசீலனே -(கூக)

அரிகரியென்றசொல் - பரிகரியாவிடில் *
அவதிஅல்லோவருங்குணசீலனே -ஆனால் -
ஆரஅரசிவசிவவென்றிடிலானந்தம் - *
ஆர்பெறுதிருப்பர் ............ குணசீலனே (கூஉ)

மாயவன்திருவடியென்றுதந்நெற்றியில் ......*
மாட்டுகிறார்பட்டைநாமத்தையே - அவ்*
வாயனார்நெற்றியில்-சாத்தும்பட்டைநாமம்...*
ஆர்திருவடியென்பார் - .......... குணசீலனே (கூங)

படிப்பாளிகளுமல்ல-முழுப்பாய்ச்சுருட்டிகள் -
பன்னூல்புரட்டும்பெரும்பாதகர்-வீணாய்-
எடுப்பார்பெருஞ்சண்டை-தொடுப்பார்ஞாயங்கேட்கில்-
என்னமோபோவென்பார் ...... அருள்சைவனே (கூச)

அடித்தாலுமுதைத்தாலும்-மானமீனமில்லாமல். *
அடிக்கடிவந்தும்பா- நாட்டஞ்செய்தே-அவர்

பிடித்தபிடியைச்சாதிக்கவழியில்லாமல் ....... *
பேய்போல்விழிப்பதவர்- ......தொழில்சைவனே (௬௫)

மூப்பாட்டன்காலத்தில்-எந்தமூடனோவந்து ... *
முகத்திற்றிருமண்சாத்தியெடுத்தான்-நானும்-
இப்பாட்டையறியாமல்-தப்பேட்டைப்பார்த்துக்கொண்டு
டிட்டலைந்தேங்கினேன்....... ளருள்சைவனே (௬௬)

ஆண்டிஎன்றுந்தாத-னென்றும்பெரியோர்சொல்-
அவைகளின்தாரதம்மியமறித்தே-நீ -- *
ஈண்டுபிழைக்கும்வழி-தெரிவித்தருள்புண்யம்*
என்பிழைபொறுத்தருள் ........ வாய்சைவனே (௬௭)

பசுபதிபாசத்தின்உண்மையைக்கண்டுணர் *
பக்குவந்தெரிந்துகொள்குணசீலனே-மிக்க
திசமூறஉண்மைப்போல்-பரம்பொருணிச்சயம்- *
திகழ்த்திக்கடைத்தேற்றுவா ......ரவர்சைவனே (௬௮)

திருஞானசம்பந்தசுவாமிதிருவடியைச் ...... *
சிரமேற்கொண்டிருவாய்குணசீலனே-எழில்-
மருவுஞ்சீகாழியில்வந்தவதரித்திடும் ..... *
உளஞ்சில்எடுத்தெனக் ... ..... ... கருள்சைவனே (௬௯)

ஞாலமெல்லாந்தரும்ஞானமூலக்கடவுளே ...... *
சம்பந்தராய்வந்தாருமைதந்த-செழும் .. ... *
பாலருந்திருவாயர்ஆத்மகோடியைச்சென்ம
பரிசங்கடத்திநின்றார்........ குணசீலனே (௭௰)

அலமருவும்பரசமயம்வென்றுசைவசித்...*
தாந்தத்தை-அடுத்தோர்க்கெலாநல்கிச்-சிவ ... ..*
ஸ்தலங்களில்வேதப்பொருளுந்தேவாரம் ....
சாத்திச்சிவபெருமான்--- ......... தாள்போற்றி (௭௧)

எலும்பைப்பெண்ணாக்கிஆண்பனைபெண்பனைஆகவும்-
இசைத்துந்திருமருகல்விடந்தீர்த்து-உள்ளங்*
குலங்கச்சமணரையும்புத்தரையும்வாதிற் ... ...*
கடிந்தருணைசெய்தார் ......... குணசீலனே (௭௨)

ஈதன்றிஇன்னமும்அத்புதமென்செய்தார் ...... *
எளியேனுக்குணர்த்துவாயருள்சைவனே-மறை *
ஓதுந்திருமேற்றளி-தன்னின்மூரவஹரிக்கன் *
றுயர்சாரூப்பியமீந்தார் ...... குணசீலனே(௯௫)

இந்தமான்மியங்கேட்க ஆநந்தம் ஆநந்தம் *
இனிதீட்சைசெய்தெனக்கருள்சைவனே-செழும் *
செந்தமிழ்வேதமாந்திருவருட்பாவோதி ...... *
சிவனருள்பெற்றுய்வாய் ...... குணசீலனே(௯௬)

பூதநாதன்வாழிவேதநான்கும்வாழி ...... *
பூதிசாதனமும்வாழிஅன்பர்-ஐம் ...... *
பூதம்வாழிவிண்மதிகதிரும்வாழி ...... *
புரவலருஞ்செங் ...... கோல்வாழியே (௯௭)

சற்போதசம்வாதம்-முற்றிற்று-

---

வாழிவிருத்தம்-

பிறந்திறக்கும்அரியயனைக்குத்தித்தாக்கும் ...... *
பிறங்கியசூலம்வாழ்கத்தன்போற்றெய்வஞ் ...... *
சிறந்ததின்றென்றேத்துமழுவாழ்கவோர்பாற் ...... *
செறித்துலகைஅளிக்குமுமைவாழ்கஎண்ணில் ...... *
நறுந்துளபமாலுதிரக்கபாலம்வாழ்க ...... *
நாடுசிவமன்றிரண்டாம்வத்தின்றென்னக் ...... *
கறங்குதிருவடிவீரக்கழலும்வாழ்கக் ...... *
காத்தென்னைஅருள்செய்சதாசிவமேவாழ்க ...... *

---

## இனிபதிப்பிக்கப்படும்புத்தகங்கள்

இராமாநுஜசிருங்கபங்கம் ...... *
பாஷண்டமதசபேடிகை ...... *
தப்தமுத்திரவித்ராவணம் ...... *
பாகவததாற்பரியசங்கிரகம் ...... *
இராமாயணதாற்பரியசங்கிரகம் ...... *
பரப்பிரம்மவிவேகவிளக்கச்சோதி ...... *
லிங்கமதகண்டனதிரஸ்காரம் ...... *